

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 22. கோயில் திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)

அநுபோக இலக்கணம்

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன்ஐந்தின் வழிஅடைத்து அமுதே
ஊறிநின்று என்னுள் எழு பரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஈறுஇலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே 1



அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்து உருக
என்பரம் அல்லா இன்அருள் தந்தாய்
யான்இதற்கு இலன்ஓர் கைம்மாறு.
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெருமானே
சீர்உடைச் சிவபுரத்து அரைசே







அரைசனே அன்பர்க்கு அடியனேன் உடைய
அப்பனே ஆவியோடு ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்து நின்றுஉருக்கிப்
பொய்இருள் கடிந்த மெய்ச்சுடரே
திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடலே
திருப்பெருந்துறைஉறை சிவனே
உரையுணர்வு இறந்துநின்று உணர்வதுஓர் உணர்வே
யான்உன்னை உரைக்குமாறு உணர்த்தே 3





உணர்ந்த மாமுனிவர் உம்பரோடு ஒழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்குஇலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப்புஅறுக்கும் எம்மருந்தே.
திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே
திருப்பெருந்துறைஉறை சிவனே
குணங்கள்தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கு இனிஎன்ன குறையே





குறைவுஇலா நிறைவே கோதுஇலா அமுதே
ஈறுஇலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்துஎன்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறைஉறை சிவனே
இறைவனே நீஎன் உடல்இடங் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே 5





இரந்துஇரந்து உருக என்மனத்துள்ளே
எழுன்ற சோதியே இமையோர்
சிரந்தனில் பொலியும் கமலச் சேவடியாய்
திருப்பெருந் துறைஉறை சிவனே
நிரந்த ஆகாயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததுஓர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்டு இன்றே

6





இன்றுஎனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று

நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீஅலால் பிறிது மற்றுஇன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்றும்நீ அல்லை அன்றிஒன்று இல்லை
யார் உன்னை அறியகிற்பாரே

7





பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்

பரந்ததுஓர் படர்ஒளிப் பரப்பே

நீர்உறு தீயே நினைவதேல் அரிய

நின்மலா நின்அருள் வெள்ளச்

சீர்உறு சிந்தை எழுந்ததோர் தேனே

திருப்பெருந் துறைஉறை சிவனே

யாருறவு எனக்கு இங்கு யார்அயல் உள்ளார்

ஆனந்தம் ஆக்கும் என்சோதி





சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதுஇலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந்துறைஉறை சிவனே
யாதுநீ போவது ஓர்வகை எனக்குஅருளாய்
வந்துநின் இணைஅடி தந்தே. 9





தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர் @
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்றுஎன்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடல்இடம் கொண்டாய்
யான்இதற்கு இலன்ஓர் கைம்மாறே 10



ஸ்ரீ மாணிக்கவாசகர்